DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 223/2022

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.ஜிஜி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

06.08.2024 – 02.20 PM

முதல் விசாரணை

1. நான் தற்போது மதுரை பாஸ்போர்ட் அலுவலகத்தில் மண்டல பாஸ்போர்ட் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 09.08.2018 ம் தேதி அலுவலகத்தில் பணியில் இருந்தபோது Singapore immigration & checkpost authority இருந்து வந்த தகவலைப் பெற்று அதில் இணைக்கப்பட்டிருந்த சிங்கப்பூர் அரசின் அறிவிக்கையின் பேரில் செய்யது சாகுல் ஹமீது என்பவரது பாஸ்போர்ட் எண்கள் 1) G0967804 என்ற திருச்சி மண்டல அலுவலகத்தில் வழங்கப்பட்ட பாஸ்போர்ட்டையும், 2) H1496349 என்ற அதே நபரின் பேரில் அப்துல் ஹமீது என்று மதுரை மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் வழங்கப்பட்ட பாஸ்போர்ட்டையும் மேற்படி நபர் இரு பாஸ்போர்ட்களை பயன்படுத்தி வந்ததாகவும், அந்த இரு பாஸ்போர்ட்களையும் அவர் பெற்று பின்னர் E043326FRESH நாள் : 21.06.1988 என்றும், அவரது பெயர் அப்துல் ஹமீது என்றும், தகப்பனார் பெயர் செய்யது அரைக்காசு என்றும், அம்மா பெயர் செய்யது இப்ராஹிம் அம்மா, பிறந்த ஊர் T.மாரியூர், பிறந்த தேதி : 12.06.1980 என்றும், பின்னர் A5339054 Date of issue : 13.05.1998/12.05.2008 Place of issue : Singapore என்றும், பின்னர் மதுரை பாஸ்போர்ட் அலுவலகத்தில் H1496349 Dated: 30.10.2008/29.10.2018 பெயர் அப்துல் ஹமீது, த/பெ.செய்யது அரைக்காசு, தா/பெ.செய்யது இப்ராஹிம் அம்மா, பிறந்த ஊர் T.மாரியூர், பிறந்த தேதி : 12.06.1980 என்றும் பெற்றுள்ளார்.

3. பின்னர் பாஸ்போர்ட் நம்பர் G967804FRESH நாள் : 19.12.2006/18.12.2016 என்ற பாஸ்போர்ட்டை சாகுல்ஹமீது, த/பெ.செய்யது, தா/பெ.செய்யது, பிறந்த ஊர் T.மாரியூர், பிறந்த தேதி : 07.05.1975 என்றும், அதன்பேரில் பாஸ்போர்ட் நம்பர் and reissue No.N2043025 Dated:06.11.2015 Expiry date 05.11.2025 ஆக தகப்பனார் பெயரையும், தாயார் பெயரையும் மாற்றி பெற்று பின்னர் மீண்டும் புதுப்பித்து பாஸ்போர்ட் நம்பர் H1496349 என்றும், இரு பாஸ்போர்ட்களையும் பயன்படுத்துவதாகவும், அதன்பேரில் அந்த நபர் குறித்தும் இரு பாஸ்போர்ட்கள் குறித்து விசாரிக்குமாறும் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் அதுகுறித்து மேற்படி நபரையும், அவர் பெற்றுள்ள பாஸ்போர்ட்களையும் ஆய்வு செய்து அறிக்கை அனுப்புமாறும் ஏற்கனவே அப்துல்ஹமீது என்ற நபர் சிங்கப்பூரில் போதை பொருள் கடத்தல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறை தண்டனை பெற்றவர் என்றும், பின்னர் விடுதலையாகி மீண்டும் கடந்த 2007, 2018 ம் ஆண்டு சிங்கப்பூர் வந்து சென்றுள்ளார் என்றும் குறிப்பிட்டு விசாரணை செய்து அந்த நபர் குறித்து விசாரிக்க இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு வேண்டிக்கொண்டு கடிதம் அனுப்பினேன்.

4. அதன்பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்துள்ளார்கள். நான் அனுப்பிய வேண்டுதல் கடிதம் அ.சா.ஆ.1 ஆகும். அத்துடன் அதுசம்மந்தமான கணிணி பதிவுகளையும் இணைத்து அனுப்பினேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி அரசு, எதிர் தரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் கூறிய விபரங்களை நான் சொல்லச் சொல்ல தட்டச்சர் தட்டச்சு செய்த விபரங்கள் சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மா.உ.ம.நீ.ந, கடலாடி